<u>சார்பு நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்.</u>

முன்னிலை- திருமதி.ச.சரண்யா., எம்.எல்.,

சார்பு நீதிபதி, வந்தவாசி

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் நாள் வியாழக்கிழமை

<u>வழக்கிடை மனு எண்.1/2025 in அசல் வழக்கு எண்.184/2023</u>

சீனிவாசன் ......மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

குமாரசாமி ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதியாக 12.01.2026 அன்று விசாரணைக்கு வந்து, மனுதாரர்/பிரதவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.P. சரவணன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J.நேதாஜி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்கள், மனு மற்றும் எதிர் உரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

<u>உத்தரவு</u>

இம்மனு பிரிவு 5 காலவரையறை சட்டத்தின் கீழ் 02.07.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பினை ரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 154 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

தான் இவ்வழக்கில் மனுதாரர் என்றும், மேற்படி வழக்கில் பிரதிவாதி என்றும், மேற்படி வழக்கில் தன் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்ய கடந்த 21.09.2022 தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உரிய நேரத்தில் தன்னுடைய வழக்கறிஞரை சந்தித்து பதிலுரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், இதனால் தன் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடந்த 02.07.2024 தேதியன்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்சமான தீர்ப்பினை செட்டசைடு செய்ய வேண்டிய அவசியமும், நியாமும் உள்ளது என்றும், மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்சமான தீர்ப்பினை செட்டசைடு செய்தால் மட்டுமே தன் தரப்பு நியாயங்களை எடுத்துரைத்து, வெற்றி பெற இயலும் என்றும், எனவே மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 154 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:-**

(3.1) மனுதாரர் மனு சட்டபடிக்கும், சங்கதிகள்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், இவ்வெதிர்மனுதாரர்கள் குறிப்பாக இந்த எதிர்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் மனுதாரரே நிரூப்பிக்க கடமைப்பட்டவர் என்றும், இவ்வழக்கானது முதலில் செய்யார் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அ.வ.எண்.349/2021 என்ற எண்ணில் மனுதாரர்/பிரதிவாதி 25.03.2022

அன்று வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி பரம் எதிருரை தாக்கல் செய்ய வேண்டி 23.06.2022 அன்று வாய்தா வைக்கப்பட்டதாகவும், அதன் பின்னிட்டு 23.06.2022, 19.07.2022 மற்றும் 21.09.2022 ஆகிய மூன்று வாய்தாக்கள் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிருரை தாக்கல் செய்வதற்கு செய்யார் சார்பு நீதிமன்றத்தில் வாய்தாக்கள் அளிக்கப்பட்டதாகவும், மனுதாரர்/பிரதிவாதி எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தான் 21.09.2022 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**3.2)** மேலும் 03.06.2024 அன்று வழக்கறிஞரை வைக்கவும், ஆர்டர் 9 ரூல் 7 மனு தாக்கல் செய்யவும் 15 நாட்கள் கால அவகாசம் அளித்து 18.06.2024 அன்று வாய்தா வைக்கப்பட்டதாகவும், மேலும் செய்யார் சார்பு நீதிமன்றத்தில் வாய்தாக்கள் அளித்து ஆஜராகாத நிலையில் உடல்நிலை சரியில்லை என்றும், அரசு பணியில் விடுப்பு கிடைக்காத காரணத்தினால் உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாக தெரிவிக்கும் சங்கதிகள் இம்மனுவிற்காக புனையப்பட்ட சங்கதிகள் என்றும், மனுதாரர்/பிரதிவாதி 60 வயதிற்கும் மேலான எதிர்மனுதாரர்/வாதியிடம் பெற்ற கடனை கொடுக்காமல் ஏமாற்றும் நோக்கத்திலும், வாதியை அலைகழிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்திலும், இருந்துவிட்டு காலதாமதத்தை மன்னிக்க கோருவது ஏற்புடையதல்ல என்றும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. தற்போது இங்கு தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்:-

(i) மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு 154 நாட்கள் காலதாமதம் மன்னிக்கத்தக்கதா?

(ii) உபய மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எவை?

5. தற்போது பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது:-

பிரச்சனை எண்.1

மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு 154 நாட்கள் காலதாமதம் மன்னிக்கத்தக்கதா?

இம்மனு பிரிவு 5 காலவரையறை சட்டத்தின் கீழ் 02.07.2024 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பினை ரத்து செய்வதற்கு மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 154 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு அன்றைய தினம் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உரிய நேரத்தில் தன்னுடைய வழக்கறிஞரை சந்தித்து பதிலுரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், இதனால் தன் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடந்த 02.07.2024 தேதியன்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்சமான தீர்ப்பினை செட்டசைடு செய்ய வேண்டிய அவசியமும், நியாமும் உள்ளது என்றும், மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்சமான தீர்ப்பினை ரத்து செய்தால் மட்டுமே தன் தரப்பு நியாயங்களை எடுத்துரைத்து, இயலும் என்று குறிப்பிட்டுள்ளார்.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் காலதாமதத்திற்கு மனு அபிடவிட்டில் சொல்லியுள்ள காரணங்களுக்கு ஆதாரம் இல்லை என்றும், எனவே எதிர்மனுதாரரை ஏமாற்ற வேண்டியும், எதிர்மனுதாரரை அலைகழிக்க வேண்டியும் உண்மையில்லாத காரணத்தை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல என்றும், எனவே இந்த மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

(iii) இந்த மனுவை பரிசீலனை செய்து பார்க்கும்போது மனுதாரர் காலதாமதப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டாரா என்பதையும் உற்றுநோக்கவேண்டியுள்ளது. காலதாமதம் எவ்வளவு நாட்கள் என்பதை பொருட்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றும், அந்த காலதாமதத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கம் உள்ளதா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று மாண்பமை உச்சநீதிமன்றத்தின் பல முன்னோடி தீர்ப்புகள் உள்ளது. மேலும் காலவரையறை என்பது தரப்பினரின் உரிமையை அழிக்கக்கூடியதாக இருக்கக்கூடாது என்றும், அவர்களுக்கு தேவையான பரிகாரம் வழங்கக்கூடிய வகையில் இருக்கவேண்டும் என்றும், காலவரையறை தீர்மானிக்கப்படவில்லை என்றால் வழக்கிற்கான காலம் நிர்ணயிக்கப்படாமல் போய்விடும் என்றும், காலவரையறை நிர்ணயம் செய்துள்ளதற்கு மிக முக்கியமான காரணம் வழக்கிற்கான காலம் நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும், அதேசமயம் தரப்பினர்களின் உரிமையை பாதுகாக்கும் வகையில் இருக்கவேண்டும் என்றும் உச்சநீதிமன்றத்தின் பல முன்னோடி தீர்ப்புகள் உள்ளது.

(iv) இத்தகைய மனுக்களை முடிவு செய்யும்போது, தரப்பினர்களின் உரிமையை பாதுகாக்கும் வகையில் அந்த மனுவினை முடிவு செய்ய வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள காரணத்தை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. எனவே எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் மனுதாரர் நடந்து வருவதாக குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொண்டு இந்நீதிமன்றம் தகுந்த செலவுத் தொகையுடன் இம்மனுவினை அனுமதிக்க முடிவு செய்கின்றது. மேலும் மனு விசாரணையை விரைந்து நடத்த எதிர்மனுதாரர் ஒத்துழைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

<u>முடிவில்:-</u>

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.750/-ஐ வருகின்ற 09.02.2026 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடியானதாக கருதப்படும். மீண்டும் இந்த மனு வருகின்ற 10.02.2026 அன்று அழைக்கப்படும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பரப்பட்டது.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.01.29 17:21:15 +0530

சார்பு நீதிபதி, வந்தவாசி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>- இல்லை

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2026.01.29 17:21:22 +0530

சார்பு நீதிபதி,

வந்தவாசி.